# தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

## தந்தை வழியாக சமூக வாழ்வை உணர்தல்

### தொடக்கச் செபம்

அன்புத் தந்தையே! உமது இறைவார்த்தையைத் திறந்த மனதோடு கேட்டு அதை எங்கள் உள்ளத்தில் பெற்று வாழ உமது ஆவியைத் தந்தருளும். உமது வார்த்தை எங்களை உம்மிடம் நெருக்கமாகக் கொணரவும், ஒளியின் மக்களாக வாழ எங்களில் தாழ்ச்சியும், தைரியமும் கொடுப்பதாக. எங்கள் வாழ்வில் இருளை அகற்றி, உண்மையின் ஒளியும், நன்மையும், மகிழ்ச்சியும் எங்களது வாழ்க்கைப் பயணத்தில் விளக்காக அமைவதாக. உமது ஒளியின் பாதையைவிட்டு நாங்கள் விலகாமல், எங்கள் வாழ்வு பிறருக்கு ஒளியாகவும், மருந்தாகவும், இரக்கம் உள்ளவர்களாகவும் திகழ வரம் தாரும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

# தவக்காலம் 04ம் ஞாயிறு.

## திருவழிப்பாட்டு ஆண்டு A (30-03-2014)

### திருப்பலி முன்னுரை

இயேசுக் கிறிஸ்துவின் பாஸ்காவிழாவிற்கு அணியமாகும் வகையில் தவக்காலப் பக்தி முயற்சிகளில் பங்கேற்று இன்று சிறப்பாக தவக்கால நான்காம் ஞாயிறு திருப்பலி வழிபாட்டில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் பெரியோர்களே! வருங்காலத் திரு அவையின் கருவாகிய இளையோர்களே! சிறுவர் சிறுமிகளே உங்கள் அனைவருக்கும் தவக்காலம் தரும் புதிய பாஸ்காப் பெருவாழ்வு கிடைக்க அன்புடன் வாழ்த்துகிறேன்.

***தவக்காலத்தின் முதலாம் வாரம் பாலை வனத்திற்கு இயேசுவோடு சென்றோம்.***
***இரண்டாம் வாரம் மலை உச்சிக்குச் சென்றோம்.***
***மூன்றாம் வாரம் தண்ணீர் உள்ள கிணற்றுக்குச் சென்றோம்.***
***நான்காம் வாரம் ஆகிய இன்று இருள் அடர்ந்த இடத்திற்கு இயேசுவோடு செல்வோம்.***

நம் மனதில் தெளிவான பார்வை இல்லாதபோது வாழ்வில் நாம் செல்லுகின்ற பாதை தடம் மாறுகின்ற நிலை உருவாகின்றது. நானே உண்மையும், ஒளியும், உயிரும் என்று சொன்ன நம் ஆண்டவர் இயேசுவின் வழியில் வாழந்து, அதனால் நிலை வாழ்வில் என்றும் இறைவனில் மகிழ்ந்து வாழ நம் இதயத்திலும், சிந்தனையிலும் தெளிவான பார்வை பெற இறைத் தந்தையின் அருள் வரம் கேட்டு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

# இறைவார்த்தை

## முதலாம் வாசகம்:
## 1 சாமுவேல் 16:1, 6, 7, 10-13

மனிதன் வெளித் தோற்றத்தைக் காண்கிறான். கடவுளோ உள்ளத்தைக் காண்கிறார்.

ஈசாவின் புதல்வர்களுள் ஒருவனான, கடவுளால் அபிஷேகிக்கப்பட்ட தாவீதைக் கண்டுபிடிக்கும் பணி சாமுவேலுக்கு அளிக்கப்பட்டது. சவுலை இஸ்ரயேலின் அரசனாகக் கடவுள் நிராகரித்த பின் இப்பணி கொடுக்கப்பட்டது. சவுல் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் அவரை விட்டு விலகிச் சென்றான். ஆவலுடன் ஈசாவின் வீட்டிற்குச் சென்று, உயரமான, அழகான எலியாபைக் கண்டதும், இவனே கடவுளால் தேர்வு செய்யப்பட்டவன் என எண்ணினான். இஸ்ரயேலின் அரசனான சவுலின் அரியணையில் அமர ஆழகிய தோற்றம் கொண்ட எலியாப் பொறுத்தாமானவன் என்று உறுதியாய் நம்பினான். ஆனால் கடவுள் சாமுவேலை தாவீதின் பக்கமாகத் திருப்பினார். கடவுள் வெளித் தோற்றத்தைக் கண்டு தீர்ப்பிடுபவரல்ல. மாறாக உள்ளத்தின் எண்ணங்களையே காண்கிறார். தாவீதின் பெருந்தன்மையான கடவுளின் பால் கொண்ட அன்பும், கடவுளின் கட்டளைகளுக்கு விசுவாசமாக இருந்ததும் கடவுளின் உள்ளத்தைக் கவர்ந்தது.

## இரண்டாம் வாசகம்:
## எபேசியர் 5:8-14

நீங்கள் ஒளியைச் சார்ந்த மக்களாக வாழுங்கள்.

ஒளியில் உண்மையான இயல்வு வெளிப்படுமாறு கடவுளை மகிழ்விப்பதைக் கற்கவும், ஒளியின் மக்களாக வாழவும் தூய பவுல் கிறிஸ்துவின் சீடர்களை வலியுறுத்துகிறார். மக்கள் தாங்கள் உயிர் வாழ்வதன் நோக்கத்தை உணரும்படி ஊக்குவிக்கிறார். அவமானத்தைத் தரும் பேராசை, ஒழுக்கக்கேடு, முட்டாள்தனம், பாவம் சார்ந்த வழிகளை ஒழித்து, நற்பண்பு, நீதிநெறி, உண்மை போன்றவற்றில் கவனம் செலுத்துவதே முழு மாற்றம். கிறிஸ்துவின் ஒளி அவர்களில் பிரகாசிப்பதைக் காண முடியும்.

## நற்செய்தி:
## யோவான் 9:1-41

பார்வையற்றோர் பார்வை பெறவே நான் இவ்வுலகைத் தீர்ப்பிட வந்தேன்.

பார்வையற்றவனைக் குணமளித்தது பெறும் குழப்பத்தை உண்டாக்கியது. அந்தப் பார்வையற்றவனை அறிந்திருந்த பரிசேயர் அக்கம்பக்கத்தினர்

அவனுடைய பெற்றோர் உட்பட அனைவரையுமே விவாதம், அவநம்பிக்கை, அவதூறு, பயம் ஆட்கொண்டது. வியக்கத்தக்க குணமளித்த அற்புதம் எப்படி ஒற்றுமையின்மையை உண்டாக்கியது? அவன் பார்வை பெற்ற கிறிஸ்துவைக் காண முடிந்தது, கடவுளின் மகிமை வெளிப்பட்ட, அவனும் அவரை விசுவசித்தான். எனினும் மற்றவர்கள் கண்ணிருந்ம் குருடராக கிறிஸ்வைக் கண்டுணரவில்லை. அவர்கள் தொடர்ந் இயேசுவைப் பாவி என்றும் பார்வை பெற்றவன் கடவுளின் நெறிகளைக் கற்பிக்கத் தகுதியற்றவன் என வலியுறுத்தினர். அவன் பெற்ற பார்வை கிறிஸ்து வழியாகப் புதிய வலிமையையும், நம்பிக்கையையும் தைரியத்தையும் அளித்தது.

## முதல் வாசகம்

மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர் ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார்“

சாமுவேல் முதல் நூலிலிருந்து வாசகம் 16: 1,6-7,10-13

அந்நாள்களில் ஆண்டவர் சாமுவேலை நோக்கி, `உன்னிடமுள்ள கொம்பை எண்ணெயால் நிரப்பிக் கொண்டுபோ. பெத்லகேமைச் சார்ந்த ஈசாயிடம் உன்னை அனுப்புகிறேன் ஏனெனில் அவன் புதல்வருள் ஒருவனை அரசனாகத் தேர்ந்துள்ளேன்“ என்றார். ஈசாயின் புதல்வர்கள் வந்தபோது, அவர் எலியாவைப் பார்த்தவுடனே, `ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவன் இவனாகத்தான் இருக்கும்“ என்று எண்ணினார். ஆனால் ஆண்டவர் சாமுவேலிடம், `அவன் தோற்றத்தையும் உயரத்தையும் பார்க்காதே ஏனெனில் நான் அவனைப் புறக்கணித்துவிட்டேன். மனிதர் பார்ப்பதுபோல் நான் பார்ப்பதில்லை மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர் ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார்“ என்றார். இவ்வாறு ஈசாய் தம் ஏழு புதல்வரைச் சாமுவேல் முன்பாகக் கடந்து போகச் செய்தார். `இவர்களையும் ஆண்டவர் தேர்ந்துகொள்ளவில்லை“ என்றார் சாமுவேல். தொடர்ந்து சாமுவேல் ஈசாயைப் பார்த்து, `உன் பிள்ளைகள் இத்தனைப் பேர்தானா?“ என்று கேட்க, `இன்னொரு சிறுவன் இருக்கிறான் அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான்“ என்று பதிலளித்தார் ஈசாய். அதற்குச் சாமுவேல் அவரிடம், `ஆள் அனுப்பி அவனை அழைத்து வா! ஏனெனில் அவன் வரும்வரை நான் உணவருந்த மாட்டேன்“ என்றார். ஈசாய் ஆள் அனுப்பி அவனை அழைத்து வந்தார். அவன் சிவந்த மேனியும் ஒளிரும் கண்களும் கொண்டு அழகிய தோற்றமுடன் இருந்தான். ஆண்டவர் சாமுவேலிடம், `தேர்ந்து கொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்!“ என்றார். உடனே சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவன் சகோதரர் முன்னிலையில் அவனைத் திருப்பொழிவு செய்தார். அன்றுமுதல் ஆண்டவரின் ஆவி தாவீதின்மேல் நிறைவாக இருந்தது.

**- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**

**- இறைவா உமக்கு நன்றி**

## பதிலுரைப் பாடல்

பல்லவி: ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை

திருப்பாடல்: 23:1-3, 3-4, 5, 6

ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை. பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார் அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார். அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார். **-பல்லவி**

தம் பெயர்க்கேற்ப எனை நீதிவழி நடத்திடுவார் மேலும், சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன் உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும். **-பல்லவி**

என்னுடைய எதிரிகளின் கண் முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர் என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர் எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது. **-பல்லவி**

உண்மையாகவே, என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் எனைப் புடைசூழ்ந்து வரும் நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன். **-பல்லவி**

## இரண்டாம் வாசகம்

தூங்குகிறவனே, விழித்தெழு! இறந்தவனே, உயிர்பெற்றெழு! கிறிஸ்து உன்மீது ஒளிர்ந்தெழுவார்“

திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5:8-14

சகோதரர் சகோதரிகளே, ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள். ஆகவே ஒளி பெற்ற மக்களாக வாழுங்கள். ஏனெனில், ஒளியே எல்லா நன்மையையும் நீதியையும் உண்மையையும் விளைவிக்கிறது. ஆண்டவருக்கு உகந்தது எது என்பதை ஆராய்ந்து பாருங்கள். பயனற்ற இருளின் செயல்களைச் செய்கிறவர்களோடு உங்களுக்கு உறவு வேண்டாம். அவை குற்றமென எடுத்துக்காட்டுங்கள். அவர்கள் மறைவில் செய்பவற்றைச் சொல்லக்கூட வெட்கமாக இருக்கிறது. அவர்கள் செய்வதை எல்லாம் குற்றமென ஒளியானது எடுத்துக்காட்டும்போது அவற்றின் உண்மை நிலை வெளியாகிறது. அவ்வாறு தெளிவாக்கப்படுவது எல்லாம் ஒளி மயமாகிறது. ஆதலால், `தூங்குகிறவனே, விழித்தெழு! இறந்தவனே, உயிர்பெற்றெழு கிறிஸ்து உன்மீது ஒளிர்ந்தெழுவார்“ என்று கூறப்பட்டுள்ளது.

**- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு**

**- இறைவா உமக்கு நன்றி**

## நற்செய்திக்கு முன் வசனம்

”உலகின் ஒளி நானே! என்னைப் பின்தொடர்பவர் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்,“ என்கிறார் ஆண்டவர்.

## நற்செய்தி வாசகம்

யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 9: 1-41

அக்காலத்தில் இயேசுசென்றுகொண்டிருக்கும் போது பிறவியிலேயே பார்வையற்ற ஒருவரைக் கண்டார். `ரபி, இவர் பார்வையற்றவராய்ப் பிறக்கக் காரணம் இவர் செய்த பாவமா? இவர் பெற்றோர் செய்த பாவமா?“ என்று இயேசுவின் சீடர்கள் அவரிடம் கேட்டார்கள். அவர் மறுமொழியாக, `இவர் செய்த பாவமும் அல்ல் இவர் பெற்றோர் செய்த பாவமும் அல்ல் கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும்பொருட்டே இப்படிப் பிறந்தார். பகலாய் இருக்கும்வரை என்னை அனுப்பியவரின் செயலை நாம் செய்யவேண்டியிருக்கிறது. இரவு வருகிறது அப்போது யாரும் செயலாற்ற இயலாது. நான் உலகில் இருக்கும்வரை நானே உலகின் ஒளி“ என்றார். இவ்வாறு கூறியபின் அவர் தரையில் உமிழ்ந்து, உமிழ்நீரால் சேறு உண்டாக்கி, அச்சேற்றைப் பார்வையற்றவருடைய கண்களில் பூசி, `நீர் சிலோவாம் குளத்துக்குப் போய்க் கண்களைக் கழுவும்“ என்றார். சிலோவாம் என்பதற்கு `அனுப்பப்பட்டவர்“ என்பது பொருள். அவரும் போய்க் கழுவி, பார்வை பெற்றுத் திரும்பி வந்தார். அக்கம் பக்கத்தாரும், அவர் பிச்சையெடுத்துக் கொண்டிருந்ததை முன்பு பார்த்திருந்தோரும், `இங்கே அமர்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தவர் இவர் அல்லவா?“ என்று பேசிக்கொண்டனர். சிலர், `அவரே“ என்றனர் வேறு சிலர், `அவரல்ல அவரைப்போல் இவரும் இருக்கிறார்“ என்றனர். ஆனால் பார்வை பெற்றவர், `நான்தான் அவன்“ என்றார். அவர்கள், `உமக்கு எப்படிப் பார்வை கிடைத்தது?“ என்று அவரிடம் கேட்டார்கள். அவர் அவர்களைப் பார்த்து, `இயேசு எனப்படும் மனிதர் சேறு உண்டாக்கி, என் கண்களில் பூசி, `சிலோவாம் குளத்துக்குப் போய்க் கண்களைக் கழுவும்“ என்றார். நானும் போய்க் கழுவினேன் பார்வை கிடைத்தது“ என்றார். `அவர் எங்கே?“ என்று அவர்கள் கேட்டார்கள். பார்வை பெற்றவர், `எனக்குத் தெரியாது“ என்றார். முன்பு பார்வையற்றவராய் இருந்த அவரை அவர்கள் பரிசேயரிடம் கூட்டி வந்தார்கள். இயேசு சேறு உண்டாக்கி அவருக்குப் பார்வை அளித்த நாள் ஓர் ஓய்வுநாள். எனவே, `எப்படிப் பார்வை பெற்றாய்?“ என்னும் அதே கேள்வியைப் பரிசேயரும் கேட்டனர். அதற்கு அவர், `இயேசு என் கண்களில் சேறு பூசினார் பின் நான் கண்களைக் கழுவினேன் இப்போது என்னால் பார்க்க முடிகிறது“ என்றார். பரிசேயருள் சிலர். `ஓய்வுநாள் சட்டத்தைக் கடைப்பிடிக்காத இந்த ஆள் கடவுளிடமிருந்து வந்திருக்க முடியாது“ என்று பேசிக்கொண்டனர். ஆனால்

வேறு சிலர், `பாவியான ஒரு மனிதரால் இத்தகைய அரும் அடையாளங்களைச் செய்ய இயலுமா?“ எனக் கேட்டனர். இவ்வாறு அவர்களிடையே பிளவு ஏற்பட்டது. அவர்கள் பார்வையற்றிருந்தவரிடம், `உனக்குப் பார்வை அளித்த அந்த ஆளைக் குறித்து நீ என்ன சொல்கிறாய்?“ என்று மீண்டும் கேட்டனர். `அவர் ஓர் இறைவாக்கினர்“ என்றார் பார்வை பெற்றவர். அவர் பார்வையற்றிருந்து இப்போது பார்வை பெற்றுள்ளார் என்பதை அவருடைய பெற்றோரைக் கூப்பிட்டுக் கேட்கும்வரை யூதர்கள் நம்பவில்லை. `பிறவியிலேயே பார்வையற்றிருந்தான் என நீங்கள் கூறும் உங்கள் மகன் இவன்தானா? இப்போது இவனுக்கு எப்படிக் கண் தெரிகிறது?“ என்று கேட்டார்கள். அவருடைய பெற்றோர் மறுமொழியாக, `இவன் எங்களுடைய மகன்தான். இவன் பிறவியிலேயே பார்வையற்றவன்தான். ஆனால் இப்போது எப்படி அவனுக்குக் கண் தெரிகிறது என்பதோ யார் அவனுக்குப் பார்வை அளித்தார் என்பதோ எங்களுக்குத் தெரியாது. அவனிடமே கேளுங்கள். அவன் வயது வந்தவன்தானே! நடந்ததை அவனே சொல்லட்டும்“ என்றனர். யூதர்களுக்கு அஞ்சியதால்தான் அவருடைய பெற்றோர் இப்படிக் கூறினர். ஏனெனில் இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொள்ளும் எவரையும் தொழுகைக் கூடத்திலிருந்து விலக்கிவிட வேண்டும் என்று யூதர்கள் ஏற்கெனவே தங்களிடையே உடன்பாடு செய்திருந்தார்கள். அதனால் அவருடைய பெற்றோர், `அவன் வயது வந்தவன்தானே! அவனிடமே கேட்டுக்கொள்ளுங்கள்“ என்றனர். பார்வையற்றிருந்தவரை யூதர்கள் இரண்டாம் முறையாகக் கூப்பிட்டு அவரிடம், `உண்மையைச் சொல்லிக் கடவுளை மாட்சிப்படுத்து. இம்மனிதன் ஒரு பாவி என்பது எங்களுக்குத் தெரியும்“ என்றனர். பார்வை பெற்றவர் மறுமொழியாக, `அவர் பாவியா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஒன்று மட்டும் எனக்குத் தெரியும்: நான் பார்வையற்றவனாய் இருந்தேன் இப்போது பார்வை பெற்றுள்ளேன்“ என்றார். அவர்கள் அவரிடம், `அவன் உனக்கு என்ன செய்தான்? எப்படிப் பார்வை அளித்தான்?“ என்று கேட்டார்கள். அவர் மறுமொழியாக, `ஏற்கெனவே நான் உங்களிடம் சொன்னேன். அப்போது நீங்கள் கேட்கவில்லை. இப்போது மீண்டும் ஏன் கேட்க விரும்புகிறீர்கள்? ஒருவேளை நீங்களும் அவருடைய சீடர்கள் ஆக விரும்புகிறீர்களோ?“ என்று கேட்டார். அவர்கள் அவரைப் பழித்து, `நீ அந்த ஆளுடைய சீடனாக இரு. நாங்கள் மோசேயின் சீடர்கள். மோசேயோடு கடவுள் பேசினார் என்பது எங்களுக்குத் தெரியும் இவன் எங்கிருந்து வந்தான் என்பதே தெரியாது“ என்றார்கள். அதற்கு அவர், `இது வியப்பாய் இல்லையா? எனக்குப் பார்வை அளித்திருக்கிறார் அப்படியிருந்தும் அவர் எங்கிருந்து வந்தவர் எனத் தெரியாது என்கிறீர்களே! பாவிகளுக்குக் கடவுள் செவிசாய்ப்பதில்லை இறைப்பற்று உடையவராய்க் கடவுளின் திருவுளப்படி நடப்பவருக்கே அவர் செவிசாய்க்கிறார் என்பது நமக்குத் தெரியும். பிறவியிலேயே பார்வையற்றிருந்த ஒருவர் பார்வை பெற்றதாக வரலாறே இல்லையே! இவர்

கடவுளிடமிருந்து வராதவர் என்றால் இவரால் எதுவுமே செய்திருக்க இயலாது“ என்றார். அவர்கள் அவரைப் பார்த்து, `பிறப்பிலிருந்தே பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் நீயா எங்களுக்குக் கற்றுத்தருகிறாய்?“ என்று சொல்லி அவரை வெளியே தள்ளினர். யூதர்கள் அவரை வெளியே தள்ளிவிட்டதைப்பற்றி இயேசு கேள்விப்பட்டார் பின் அவரைக் கண்டபோது, `மானிடமகனிடம் நீர் நம்பிக்கை கொள்கிறீரா?“ என்று கேட்டார். அவர் மறுமொழியாக, `ஐயா, அவர் யார்? சொல்லும். அப்போது நானும் அவரிடம் நம்பிக்கை கொள்வேன்“ என்றார். இயேசு அவரிடம், `நீர் அவரைப் பார்த்திருக்கிறீர்! உம்மோடு பேசிக்கொண்டிருப்பவரே அவர்“ என்றார். அவர், `ஆண்டவரே, நம்பிக்கை கொள்கிறேன்“ என்று கூறி அவரை வணங்கினார். அப்போது இயேசு, `தீர்ப்பு அளிக்கவே நான் இவ்வுலகிற்கு வந்தேன் பார்வையற்றோர் பார்வை பெறவும் பார்வையுடையோர் பார்வையற்றோர் ஆகவுமே வந்தேன்“ என்றார். அவரோடு இருந்த பரிசேயர் இதைக் கேட்டபோது, `நாங்களுமா பார்வையற்றோர்?“ என்று கேட்டனர். இயேசு அவர்களிடம், `நீங்கள் பார்வையற்றோராய் இருந்திருந்தால் உங்களிடம் பாவம் இராது. ஆனால் நீங்கள் `எங்களுக்குக் கண் தெரிகிறது“ என்கிறீர்கள். எனவே நீங்கள் பாவிகளாகவே இருக்கிறீர்கள்“ என்றார்.

**- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**

**- கிறிஸ்துவே உமக்கு புகழ்.**

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

## பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**அன்புத் தந்தையே இறைவா!**

உமது திருச்சபைக்கு நீர் அளித்திருக்கின்ற இந்தத் தவக்காலத்திற்காக உம்மை நன்றியுடன் புகழ்கின்றோம். திருச்சபையின் விண்ணகம் நோக்கிய திருப்பயணத்தில் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவு நிலையினர் அனைவரும் தங்களின் சொல்லிலும் செயலிலும் உமது புனித்தத்தைப் பிரதிபலித்து வாழ்ந்திடவும், அனைவருக்கும் மேன்மையான வழிகாட்டுதல் தந்திடவும் அருள்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நான் உன்னை மறக்கவே மாட்டேன் என்ற தந்தையே!**

பிறருக்கு நன்மை செய்பவர்களை மனமுவந்து பாராட்டவும், ஏற்றுக்கொள்ளவும், குறை கூறுகின்ற தெளிவற்ற பார்வை எம்மில் மாறிட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

நீர் எமக்குக் கொடுத்துள்ள மக்கள் செல்வங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவர்கள் இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பின் நாள் என்னும் இறைவெளிப்பாட்டை தம் உள்ளத்தில் ஆழமாகப் பதித்து: இக்காலத்தை உம்மையே தேடி நேசிப்பதிலும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவும் உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும், செயற்படவும் அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விடுதலையின் தெய்வமே இறைவா!**

உம்முடைய அன்பிலிருந்து எம்மைப் பிரிக்க முயற்சிக்கும் மனிதர்கள், பொருட்கள், ஆசைகள், சந்தர்ப்பங்கள் போன்ற கொடிய சோதனைகளிலிருந்து நாங்கள் விடுதலை பெற்று உமக்கும், உமது வார்த்தைக்கும் மாத்திரமே செவிசாய்த்து, உண்மையான விசுவாச வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய அருளை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

இத்தவ நாட்களிலே எமக்கு நீர் தந்திருக்கும் உமது செய்தியையும், விருப்பத்தையும், சித்தத்தையும், வழிகாட்டுதல்களையும் நாம் சரியான விதத்திலே புரிந்துகொண்டு உம்மோடும், எம் உறவுகளோடும் ஒப்புரவாகி, பகைமைகளை விட்டுவிட்டு மனமாற்றமடைந்து உமது விருப்பப்படி நடக்க வேண்டிய ஞானத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

தொலைத் தொடர்பு ஊடகங்கள், தவறான விளம்பரங்கள், பண்பாட்டுச் சிதைவுகள் இவற்றின் மத்தியில் எங்கள் இளைஞர்கள், இளம் பெண்கள் பாவச் சோதனைகளுக்கு உடன்படாமல் உமது வார்த்தையின் வழிநடந்து வெற்றி வாழ்வைக் கண்டிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

உம் திருமகனின் குரலுக்கு நாங்கள் செவிசாய்த்து, அவரது வழியில் நடந்திடவும், குடிப்பழக்கம், போதைப்பொருள் நுகர்வு, சிற்றின்ப நாட்டங்கள் இவை மனித மாண்பைச் சிதைக்கின்றன என்பதை உணர்ந்து இளைஞர்கள் நற்செய்தியின் வழி வாழ்ந்து மாண்புற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

# இன்றைய சிந்தனை

"எங்களுக்குக் கண் தெரிகிறது.. ..
நீங்கள் பாவிகளாகவே இருக்கிறீர்கள்"

கண் இருந்தால் மட்டும் போதாது. பார்வை பெற கண்ணில் ஒளி இருக்க வேண்டும். பார்க்கும் பொருளிலும் ஒளி பட்டு பிரதிபலிக்க வேண்டும். இயேசு என்னும் ஒளி, கண்ணின் ஒளியாகவும் பார்க்கும் பொருளின் ஒளியாகவும் இருக்கவேண்டும்.அப்பொழுது, பார்க்கும் பொருளின் உண்மைப் பொருளை உணர முடியும்.

அந்த பரிசேயர்களுக்கு கண் இருந்தது. கண்ணில் ஒளி இருந்தது. ஆனால் இயேசு என்னும் உன்னத ஒளி அவர்களில் இல்லை.எனவேதான், பார்த்தார்கள். ஆனால் தவறாகப் பார்த்தார்கள். பார்வையற்றிருந்த ஒருவர் இன்று பார்வையோடு இருப்பதை ஏற்றுக்கொள்ளம் பார்வை அவர்களுக்கு இல்லை. "உங்கள் மகன் இவன்தானா?" என்று கேட்கும் அளவுக்கு அவர்களின் பார்வை தடை பெற்றிருந்தது.

பாவத்தில் இருக்கும் மனிதனின் பார்வையும் தடைபடுகிறது. தீய சிந்தனை, தீய செயல்பாடுகள் உள்ள மனிதனின் பார்வை மங்கிவிடுகிறது. இதயம் சுருங்கி, உண்மையையும் எதார்த்தத்தையும் ஏற்றுக்கொள்ளும் அகக்கண் புறையுற்று, பார்வையைப் பாதித்துவிடுகிறது. பார்வைக்கும் பாவத்திற்கும் நெருக்கம் அதிகம். புனித பார்வையில் சரியானதை, உண்மையை காண்போம். அங்கு கடவுளின் மாட்சியைக் காணலாம். கண்டு இனிது வாழ்வோம்.

மன்றாட்டு:

**இறைவா, எங்கள் நம்பிக்கையை ஆழப்படுத்தியருளும்.**

# தியானிப்போம்

வரலாறு முழுவதும் கடவுள் தனது குணமளிக்கும் தன்மையையும் ஒளியின் பிள்ளைகளாக வாழத் தகுந்த போதனைகளையும் வழங்கி வந்துள்ளார். பாவத்தில், இருளில், நொறுங்குண்ட இருந்த போதும் கடவுள் நம்மைத் தொடர்ந்து அவரோடு ஒளியில் நடந்து, நன்மை, அன்பு, உண்மை, நம்பிக்கை பெற அழைத்துள்ளார். மெதுவாக ஆனால் நிச்சயமாக அவர் நம்மீது கொண்ட அன்பினால் குணமடைகிறோம்.

குணமடைகிறோம் என்றால் முழுமையடைகிறோம். இப்போது நாம் பார்க்கிறோம். தந்தையாகிய கடவுளைப் போல் பார்க்கிறோம். கடவுள் வெளித் தோற்றத்தைக் கண்டு தீர்ப்பிடுபவரல்ல. மாறாக உள்ளத்தின் எண்ணங்களையே காண்கிறார் என நாம் அறிவோம். இப்புதிய பார்வையால் நாம் ஒளியின் பாதைக்கு வழிநடத்தப் படுகிறோம். வெளித்தோற்றம் என்பது நம் வெளிப்புறத் தோற்றம் மட்டுமல்ல. மாறாக நம்மைச் சுற்றி நிகழும் உலக வாழ்க்கைக்கு நாம் எவ்வாறு நடக்கிறோம் என்பதும் தான். குறிப்பாக நம்மை அலங்கரிப்பது, நமது நம்பிக்கையின் பேறாக்கம், சமூகக் கட்டமைப்பு, வெற்றி தோல்விகளை நிர்ணயித்தல், உறவுகளுக்கும் திருமணத்திற்குமுள்ள அரப்பணிப்பு, தார்மீக ஒழுக்கப் பிரச்சனைகளில் நம் நடப்பு மற்றும் தீர்வு, போன்றவைகள் உள்ளடங்கும். இப்புதிய கருத்து நம் ஒவ்வொருவரிலும் உண்மையைத் தேடி, நன்மையை நாடி, தந்தையின் மங்கா ஒளி நம் தோற்றத்தில் பிரகாசிக்கச் செய்து நம் உள்ளத்தை வெளிப்படுத்தும். இதைக் காண தைரியமும் தாழ்ச்சியும் உன்னிடம் உள்ளதா?

தந்தையின் ஒளியில் நடக்க விடப்பட்ட அழைப்பை ஏற்று அவரது தோற்றத்தை கொண்டு உண்மை, நன்மை வழியில் நடக்க விசுவாசமும் தைரியமும் மிக முக்கியம். இதற்கு தனிப்பட்ட அர்ப்பணிப்பு மட்டுமின்றி, வலியிலுள்ளோர், மனதுடைந்தோர், தனிமையுற்றோர், தேவையுற்றோர், பாவத்தில் உரள்வோர் போன்றவர்களுடன் தாழ்ச்சியுடன் ஒன்றித்து நடக்க அர்ப்பணிப்பும் தேவை. தந்தையின் ஒளியில் மேற்கொள்ளும் இந்நடப்பு நமக்கும் நம் சமூகத்திற்கும் மனமாற்றத்தைக் கொணர்வதாக. நாம் எடுக்கும் ஒவ்வொரு படியும் அன்பு, அமைதி, சமாதானம், நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியை அளித்து உலகின் இருளை அகற்றுவதாக.

## சிந்திப்போம்

### அன்பியங்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றிப் குழுவினரோடு பகிர்ந்து கொள்வோம்.

தவக்காலம் நம்மைப் புனிதத்தன்மைக்கு அழைக்கும் காலம். நம் சமூகத்தில் மறைந்துள்ளவற்றைப் பிறர் சுட்டிக்காட்டியுள்ளனரா? நாம் பிறரைத் தீர்ப்பிடுகிறோமா? நாம் ஒன்றுகூடும்போது புரணி பேசுகிறோமா? விவாகரத்தானவர்களை மறுமணம் செய்தவர்களை நாம் எப்படிப் பார்க்கிறோம்? எய்ட்ஸ், முன்னாள் குற்றவாளிகள், ஓரினச்சேர்க்கையுள்ளோர் பற்றி நம் சமூகப் பார்வை எப்படியுள்ளது? சமூக ஒன்று கூடலில் இணையாத அக்கம்பக்கத்தினர் பற்றி உன் அபிப்ராயம் என்ன?

### ஆலயப் பணிக்குழுக்களுக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றிப் குழுவினரோடு பகிர்ந்து கொள்வோம்.

தவக்காலம் நமது திருமுழுக்கு உறுதிப்பாடுகளைப் புதுப்பிக்கும் காலம், குறிப்பாக சாத்தானையும் அவனது செயல்களையும் செய்யாதிருத்தல். உங்கள் குழுவை இருளுக்கு இட்டுச்சென்ற சமீப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றிக் கலந்துரையாடவும். அதில் சம்பந்தப்பட்ட நபரின் நோக்கம் என்ன? அதன் விளைவுகள் என்ன? அது எப்படித் தீர்க்கப்பட்டது? என்ன நடந்ததென்று உங்களால் உணர முடிகிறதா? அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடவுளின் அன்பை உறுதிப்படுத்தி காயங்களை ஆற்ற முடியுமா?

### குடும்பத்தினருக்காக:

நாம் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைகளில் நம் மனதைத் தொட்டவைகளைப் பற்றிப் குடும்பத்தினரோடு பகிர்ந்து கொள்வோம்.

உங்கள் குடும்பநபர் ஒருவர் பிறர் வாழ்வில் ஒளியேற்றிய சமீப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றிக் கலந்துரையாடவும். அது உங்கள் குடும்பத்திலுள்ள கடவுளின் பிரசன்னத்தை எப்படிப் பிறருக்கு வெளிப்படுத்தியது? குடும்பத்தினர் அனைவரும் பிறருக்கு ஒளியாக இருக்கவும், கடவுளின் ஒளியின் பாதையில் தொடர்ந்து நடக்கவும் ஒரு உறுதிமொழித் திட்டத்தை செயல்படுத்தவும்.

### தனிநபருக்காக:

நீ வாசித்த இறைவார்த்தைகளில் உன் மனதைத் தொட்டவைகளைப் பற்றிச் சற்று நேரம் சிந்தித்துப் பார். இந்த இறைவார்த்தைகளைப் வேறு ஒருவருடன் பகிர விரும்பினால் எதைப் பகிர்ந்து கொள்வாய்?

வாழ்வை உற்றுநோக்கவும், பிறரைத் தீர்ப்பிடவும் உலக மாயைகள் என் வழியைத் தீர்மானிக்க வைக்கிறதா? என் வாழ்வின் எந்தெந்த இடங்களில் என் கத்தோலிக்க நம்பிக்கை என்னை சிந்திக்கத் தூண்டுகிறது? இத்தவக்காலத்தில் சேர்ந்து பயணிக்க வேறொரு நபரைத் தேர்வு செய்து, அவருடன் உயிர்ப்பு விழாவின் பொருளுக்கும் கடவுளின் அன்புக்கும் புத்தாக்கம் கொடுக்கவும்.

## நம் வாழ்விற்காக:

மங்கிய செயலிழந்தப் பார்வையால் தந்தையாம் கடவுளின் மாட்சிமையைக் காண முடியாது. செபத்தாலும் தியானத்தாலும் தந்தையாம் கடவுளின் கண்களால் மட்டுமே அதைக் காண முடியும். தமத்திருத்துவத்தின் பெயரால் எதைச் செய்யும் முன்னர் தந்தையாம் கடவுளோடு இருங்கள்.

## நற்செயல் புரிவோம்

### ஆலயப் பணிக்குழுக்கள்:

விசுவாசக் கண்ணால் காணும்போது உங்கள் பார்வையிலுள்ள வித்தியாசத்தை அதே முன்னால் உறுப்பினருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

### குடும்பத்தினர்:

விசுவாச வாழ்க்கையில் உங்கள் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அதே உறவினருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

### தனிநபர்:

உங்கள் விசுவாச வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை முன்னால் மின்னஞ்சல் அனுப்பிய நபர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## நிறைவு செபம்

இறைவா! ஒளியின் மக்களாக வாழவும், ஒளியின் கனிகளைப் பெற்று நல்லதை, சரியானதை, உண்மையானதைச் செய்யவும் வரம் வேண்டி, உலகின் ஒளியாம் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். ஆமென்.